### அரசியல் காழ்ப்புணர்ச்சியால்

# தி.மு.க.வினர் மீது போடப்பட்ட பொய் வழக்கு!

## உடனடியாக விடுவித்த நீதிமன்றம் – த.வெ.க. அரசுக்கு மீண்டும் குட்டு!

சென்னை, ஜீலை 24-

**கடந்த 21/4/2026 அன்று சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த எழும்பூர் பகுதிக் கழக வழக்கறிஞர் நேரு பிரபாகரன், முருகேசன் தெருவில் உள்ள வீடுகளில் வீட்டினரின் அனுமதியின்றி த.வெ.க. வினர் ஒட்டிச்சென்ற சுவரொட்டிகளைக் கிழித்து அப்புறப்படுத்தி உள்ளார்.**

அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தற்போது அவர் மீதும் அவரது தம்பி 78 வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.ஜெகன் மீதும் பொய் வழக்குப் புனையப்பட்டு, நேற்று முன்தினம் (22.07.2026) காலை அவர்களைக் காவல்துறை கைது செய்து எழும்பூர் நீதிமன்ற இரண்டாவது குற்றவியல் நீதிமன்ற நீதி அரசர் முன் ஆஜர்படுத்தினர்.

இவ்வழக்கை ஆய்வு செய்த மாண்பமை நீதியரசர் அவர்கள் இருவர் கைதினையும் ரத்து செய்து விடுவித்தார். தி.மு.க. வினர் மீது த.வெ.க. அரசு பொய் வழக்குப் போட்டு கைது செய்வது தொடர்கதையாகி வரும் சூழலில் நீதிமன்றம் இன்று த.வெ.க. அரசின் மீண்டும் தலையில் குட்டு வைத்துள்ளது.

### 72 நாள்களில் ஆளுங்கட்சியின் சாதனைகள் என்ன?

# த.வெ.க. ஆளும் கட்சிப் பிரமுகர்களே அத்து மீறல், ஊழல், பாலியல் குற்றங்களுக்கு ஆளாகும் நிலை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜீலை 24-

ஆளும் த.வெ.க.வின் கடந்த 72 நாள்கள் ஆட்சி பாராட்டத்தக்கதாக இல்லை. ஆளும் கட்சிப் பிரமுகர்களின் அத்துமீறல்கள், தரம் தாழ்ந்த பேச்சுகள் – மக்கள் மத்தியில் வெறுப்பைத்தான் விதைத்து வருகின்றன. இடைத் தேர்தலில் அதனை ஆளும் கட்சி சந்திக்க நேரிடும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

த.வெ.க. தலைமையில் ஒரு கூட்டணி அரசு அமைந்து 72 நாட்கள் ஆகின்றன. இத்தனை நாட்களில் இந்த அரசின் நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் இல்லை ஏமாற்றமே மிஞ்சியிருக்கிறது. என்ன வாக்குறுதியை அளித்து 108 இடங்களைப் பிடித்ததோ, அவற்றை நிறைவேற்று வதற்கான எந்த முன்னெடுப்பையும் அரசு எடுத்ததாகத் தெரியவில்லை.

மாறாக, ஆட்சியைத் தக்க வைப்பதற்காகக் குதிரை பேரமும், கட்சிகளை உடைத்தல், கட்சிகளைக் கலைத்தல், பிற கட்சி எம்.எல்.ஏ.க்களைப் பதவி விலகச் செய்து தங்கள் கட்சியில் இணைத்துக்கொள்ளல், இவை தவிர, எதிர்க்கட்சிகளின் மீதான அடக்குமுறையும், கருத்துரிமைப் பறிப்புமே அன்றாட நடப்புகளாகிவிட்டன.

**த.வெ.க. அரசின் பழிவாங்கும் அரசியல்!**

தங்கள் ஆட்சியில் பலம் இல்லை என்னும் தன்னம்பிக்கையின்மை, மக்களால் வலிமையான எதிர்க்கட்சியாக உருவாக்கப்பட்டுள்ள தி.மு.க. மீதும், அதன் பொறுப்பாளர்கள்மீதும் அடக்குமுறையினை ஏவுவதன் மூலம் தன்னை பலம் மிக்கதாகக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறது.

1. தூத்துக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மேனாள் அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணனைக் கைது செய்து மிரட்டல்.

2. யாரோ ஒருவர் பணம் வாங்கினார் என்று மேனாள் போக்குவரத்துத் துறை அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.எஸ்.சிவசங்கரிடம் காவல்துறை விசாரணை.

3. த.வெ.க. எம்.எல்.ஏ.க்களுக்குப் பேரம் பேசினார்கள் என்று சிலரைக் கைது செய்துவிட்டு, எந்த விதமான சரியான ஆதாரங்களும் இல்லாமல், மேனாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மீதும், அவரது தம்பி மீதும் வழக்குகள், தேடுதல் என்று பரபரப்பு.

4. வீட்டில் நடத்தப்பட்ட சோதனைகளுக்குப் பிறகு, எப்போது தன்னால் விசாரணைக்கு வர முடியும் என்று விவரமாகத் தகவல் அனுப்பிய பிறகும், மேனாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு ‘லுக் அவுட் நோட்டீஸ்’ அனுப்புதல்.

5. பொதுக்கூட்டத்தில் விமர்சித்தார் என்பதற்காக, விளாத்திகுளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் மீது கைது நடவடிக்கை.

6. சமூக ஊடகங்களில் இந்த ஆட்சியை விமர்சித்து எழுதிய மாற்றுத் திறனாளி உள்பட பலர் மீது வழக்குகள், கைதுகள்.

7. ‘ஜென் சீ’ தி.மு.க. என்ற பெயரில் கூட்டங்களை நடத்திய இளைஞர்கள் மீது தாக்குதல், கைது மிரட்டல்கள், காவல்துறை கண்காணிப்புகள், வீடுகளில் தேடல்கள் என்று பட்டியல் நீள்கிறது.

8. ஊடகவியலாளர் விஜயன் மீது விசாரணை என்ற பெயரில் அலைக்கழிப்பு, செல்போன் பறிப்பு.

இப்படி பழிவாங்கும் அரசியல் தான் இந்த இரண்டு மாதங்களில் நடந்திருக்கிறதே தவிர, பாராட்டத்தக்க, மக்களுக்கான எந்த திட்டங்களும் நடத்தப்படவில்லை.

இன்னொரு புறம், சமூக ஊடகங்களின் வாயிலாக எதிர்க்கட்சிகள் மீது அவதூறு, வசைமாரி, ஆபாச அர்ச்சனைகள். இதற்கு ஊக்கமளிக்கும் வகையில் அமைச்சர்களில் சிலரே விடுக்கும் மிரட்டல்கள்.

**முகம் சுளிக்க வைக்கும் முதலமைச்சர் பேச்சுகள்!**

இவற்றுக்கு உச்சமாக சட்டமன்றத்திலும், கரூர் கூட்டத்திலும் முதலமைச் சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்களின் முகம் சுளிக்க வைக்கும் பேச்சும், பாவனைகளும் இருக்கின்றன. ஒரு மேனாள் முதலமைச்சரை, இந்நாள் முதலமைச் சர் ஒருவர் இவ்வளவு மோசமாகப் பேசுவாரா என்று சொல்லும் அளவுக்குத் தமிழ்நாட்டில் இல்லாத வகையிலான, யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத நடவடிக்கைகள்.

இவற்றுக்கு மேலாக, மறைமுகமான மின் கட்டண உயர்வு, கொள்கை எதிரி என்று சொல்லிக் கொண்டே ஒன்றிய அரசின் விபிஜி ராம்ஜி போன்ற திட்டங்களை ஏற்பதை மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதன் எதிர்விளைவுகள் பேருருக் கொள்ளும் என்பதை ஆட்சியாளர்கள் எண்ணிப்பார்க்கத் தவறக் கூடாது. இந்தப் போக்கு மாறாவிட்டால், முறையான ஆட்சியாக இது நடக்காவிட்டால், இது அனைத்துக் கட்சிகளையும் ஒன்று சேர்த்து இந்த ஆட்சிக்கு எதிராக நிறுத்தும்! இன்றைக்கு உடன் இருக்கும் கூட்டணிக் கட்சியினரும் கூட, இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டு மனம் நொந்து முழுமையாக ஆட்சியை ஆதரிக்க முடியாம லும், எதிர்க்க முடியாமலும் தவித்து வருவதைக் காண முடிகிறது. இத்தகைய நிலையில், அக் கட்சிகளும் வெகுநாள் நீடிக்க முடியாது. தவிர்க்க முடியாத சூழலில் தொடங்கிய ஆதரவு நிலைமை அப்படியே இருக்கும் என்று அரசு எதிர்பார்க்கவும் முடியாது.

எதிர்வரும் இடைத் தேர்தல்களிலேயே மக்களின் எதிர்ப்பு அலை தீவிரமாக வெளிப்படுவதை எவராலும் தடுக்க முடியாது!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### நீட் தேர்வை ரத்து செய்வது குறித்து

# அவையில் உடனடியாக விவாதிக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் - பி.வில்சன் ஒத்திவைப்பு தீர்மானம்!



புதுடெல்லி, ஜீலை 24–

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும், தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் 2019 மற்றும் தேசிய பல் மருத்துவ ஆணையச் சட்டம் 2023 ஆகியவற்றில் அவசரத் திருத்தங்களை மேற்கொள்ள வலியுறுத்தியும் நாடு முழுவதும் மாணவர்களும் இளைஞர்களும் நடத்தி வரும் போராட்டங்கள் குறித்த மிக முக்கியமான பொதுப்

பிரச்சனை பற்றி விவாதிக்க, 22 ஜீலை 2026 அன்றைய அவையின் பட்டியலிடப்பட்ட அலுவல்களை நிறுத்தி வைக்க வேண்டும். மருத்துவ மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கையில் நீட் தேர்வு ஒரு நியாயமான மற்றும் சமமான அமைப்பை வழங்கத் தவறிவிட்டது என்பதை தொடர் போராட்டங்கள் வெளிப்படுத்துகின்றன.

நீட் என்பது கொடூரமான தேர்வு முறையாக மாறியுள்ளது. இது பயிற்றுவிக்கும் (coachingdriven) மையங்களை சார்ந்த ஒரு தேர்வாக மாறியுள்ளது. இதில் வெற்றி என்பது உண்மையான திறமையை விட விலையுயர்ந்த தனியார் பயிற்சி மையங்களை அணுகுவதையே பொறுத்துள்ளது. இது மாநில வாரியங்கள், அரசுப் பள்ளிகள், கிராமப்புறப் பின்னணிகள், பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர் மற்றும் சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. இதன் மூலம் சமத்துவம், சமூக நீதி மற்றும் சம வாய்ப்பு ஆகிய அரசியலமைப்புத் கொள்கைகளை வீழ்த்தியுள்ளது.

வினாத்தாள் கசிவு, திட்டமிடப்பட்ட தேர்வு முறைகேடுகள், ஆள்மாறாட்டம் மற்றும் பிற குளறுபடிகள் தொடர்ந்து நடப்பதன் மூலம் நீட் தேர்வின் நம்பகத்தன்மை மீண்டும் மீண்டும் சீர்குலைந்துள்ளது. இந்தத் தொடர் தோல்விகள் லட்சக்கணக்கான மாணவர்களது மற்றும் பெற்றோர்களின் நம்பிக்கையை உடைத்துள்ளன. இத்தகைய தொடர் குளறுபடிகளால் சூழப்பட்ட ஒரு தேர்வு முறை, நாட்டில் மருத்துவராக விரும்பும் மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதை இனி தொடர அனுமதிக்க முடியாது.

கல்வி என்பது அரசியலமைப்பின் பொதுப் பட்டியலில் (Concurrent List) வருகிறது. நாடாளுமன்றம் உயர்கல்விக்கான தரநிலைகளை நிர்ணயிக்க முடியும் என்றாலும், சேர்க்கை மற்றும் கல்வி நிர்வாகம் தொடர்பான விவகாரங்களில் சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநிலங்களுக்கு உண்டு. தற்போதைய சட்டக் கட்டமைப்பு சேர்க்கை முறையை நியாயமற்ற முறையில் ஒன்றிய மயமாக்கியுள்ளது, கூட்டாட்சி அமைப்பைச் சீர்குலைத்துள்ளது மற்றும் மாநிலங்களின் சொந்தக் கல்வித் தேவைகள் மற்றும் சமூக நிலவரங்களுக்கு ஏற்ப சேர்க்கை முறைகளை உருவாக்கும் நெகிழ்வுத்தன்மையை மாநிலங்களிடமிருந்து பறித்துள்ளது.

இத்தகைய சூழ்நிலை யில், தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019 மற்றும் தேசிய பல் மருத்துவ ஆணையச் சட்டம், 2023 ஆகியவற்றைத் திருத்துவதும், நீட் தேர்வை ரத்து செய்து, கல்வித் தரத்தைப் பராமரிக்கும் அதே வேளையில் மருத்துவ மற்றும் பல் மருத்துவ நிறுவன சேர்க்கைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு மீண்டும் வழங்குவதும் அத்தியாவசியமாகி உள்ளது.

மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் தொடர் போராட்டங்கள், தொடர்ச்சியான தேர்வு முறைகேடுகள், தேர்வு முறையின் மீதான பொது நம்பிக்க இழப்பு, கூட்டாட்சித் தத்துவம், சமூக நீதி மற்றும் கல்விக்கான உரிமை ஆகியவற்றின் மீதான தொலை நோக்கு பாதிப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, விதி 267ன் கீழ் அவையின் அலுவல்களை உடனடியாக நிறுத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டும் என்றும், தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் 2019 மற்றும் தேசிய பல் மருத்துவ ஆணையச் சட்டம் 2023 ஆகியவற்றில் தகுந்த திருத்தங்களைச் செய்து நீட் தேர்வை ரத்து செய்ய அரசாங்கத்தை அவை வலியுறுத்த வேண்டும். என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# பெரம்பலூர் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண்க!

## மக்களவையில் அருண் நேரு கோரிக்கை!



புதுடெல்லி, ஜீலை 24 –

பெரம்பலூர் விவசாயி களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு கோரி ஒன்றிய அரசை வலியுறுத்திய அருண் நேரு மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் மக்காச்சோளம், நெல், பருத்தி உள்ளிட்ட முக்கிய பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து மக்களவையில் பெரம்பலூர் எம்.பி. அருண் நேருமத்திய அரசின் கவனத்தை வலுவாக ஈர்த்தார்.

பெரம்பலூர் விவசாயி களின் உண்மை நிலையை எடுத்துரைத்த அவர், அவர்களுக்காக அரசு மேற்கொண்ட ஆய்வுகள் என்ன, அதன் முடிவுகள் என்ன, தரமான விதைகள், உரங்கள், எளிய கடன் வசதி, தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் உறுதியான சந்தை வாய்ப்புகளை வழங்க இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை மத்திய அரசிடம் நேரடியாகக் கேள்வி எழுப்பி விளக்கம் கோரினார்.

இதற்கு பதிலளித்த ஒன்றிய அரசு, பெரம்பலூரில் புதிய பயிர் ரகங்கள் அறிமுகம், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், விதைகள் மற்றும் வேளாண் இடு பொருட்கள் வழங்குதல், ஒழுங்கு முறை சந்தைகள், eNAM வசதி மற்றும் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எம் பி அருண் நேரு பெரம்பலூர் விவ சாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசின் அனைத்து திட்டங்களும் காகிதத்தில் மட்டு மல்லாமல், முழுமையாக களத்தில் செயல்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து நலன்களும் காலதாமதமின்றி சென்றடைவதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். பெரம்பலூர் விவசாயிகளின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக தொடர்ந்து நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன்என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பெரம்பலூர் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புகளை உறுதி செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தினார் .

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள், வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் முனைவோர் வாய்ப்புகள் போதுமான அளவில் கிடைக்கிறதா என்பதை மக்களவையில் பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு அவர்கள் கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக, வேளாண்மை சார்ந்த தொழில்கள், உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வளர்ந்து வரும் புதிய துறைகளில் பெரம்பலூர் இளைஞர்களுக்கு என்னென்ன பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன, எத்தனை பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன, பயிற்சி பெற்றவர்களில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது, பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு என்ன சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதற்கு மத்திய அரசிடம் விரிவான விளக்கம் கோரினார்.

இதற்கு பதிலளித்த ஒன்றிய அரசு, பிரதமர் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY), ஜன் ஷிக்ஷன் சன்ஸ்தான் (JSS), தேசிய பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (NAPS) மற்றும் தொழிற்பயிற்சி நிலை யங்கள் (ITIs) மூலம் பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும், கடந்த நான்கு ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பல்வேறு தொழில்துறை பயிற்சிகளைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எம்.பி.அருண் நேரு பெரம்பலூர் இளைஞர்கள் வேலை தேடி வெளியூருக்கு செல்ல வேண்டிய நிலை மாற வேண்டும். மத்திய அரசின் அனைத்து திறன் மேம்பாட்டு திட்டங்களும் பெரம்பலூர் இளைஞர்களை நேரடி யாக சென்றடைய வேண்டும். பயிற்சியுடன் வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். இதற்காக ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, பெரம்பலூர் இளைஞர்களின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுப்பேன் என்று தெரிவித்தார்.

---

### இதுவரை ரூ.6 கோடியே 51 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 51 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 22-07-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | சொ.வெங்கடாசலம், துப்பாக்குடி, திருநெல்வேலி மேற்கு மாவட்டம். | 25,000/– |
| 2. | எம். முகமது இக்லாஸ், ஸ்வர்ணாம்பிகை நகர், விருகம்பாக்கம், சென்னை – 92. | 25,000/– |
| 3. | ஆர். ராயப்பன், கோடதாசனூர், காரமடை, கோவை மாவட்டம். | 25,000/– |
| 4. | என்.சுதந்திரபாண்டியன், 5வது வார்டு, அல்லி நகரம், தேனி மாவட்டம். | 25,000/– |
| 5. | சா.செல்வராசன், பாளையம் பேரூர், குஜிலியம்பாறை, திண்டுக்கல் மாவட்டம். | 25,000/– |
| 6. | வே.ராஜ், 11வது வார்டு, இலஞ்சி பேரூர், தென்காசி மாவட்டம். | 25,000/– |
| 7. | வண்ணை மோகன், வ.உ.சி.நகர், தண்டையார்பேட்டை, சென்னை – 81. | 25,000/– |
| 8. | வெ.நல்லையா, பேரண்டூர் அஞ்சல், ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். பழனியப்பன்

**ஜூலை 24 (2014)**



**திராவிட இயக்கத்தில் துவக்க கால உறுப்பினராக இருந்தவர்.**

**உடுமலைப்பேட்டை நகரத்தில் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**உடுமலைப்பேட்டை நகர்மன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இவர் கூட்டுறவு வங்கி – வீடுகட்டும் சங்கம் – ஆதிதிராவிடர் கூட்டுறவு நாணய சங்கம் போன்ற கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராகவும், இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**